ATS Nallur


விலை ரூபா 4-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 33 மாசி 17 ஷஃபான் 13 இதழ்: 19

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 1-3-1991


## அதிபர்கள் கொலையை கண்டித்தும் பரீட்சைகளை நடத்துமாறு கோரியும் யாழ். மாணவர்கள் பேரணி!

(யாழ்ப்பாணம்)
வங்காலை அதிபர்கள் கொலையைக் கண்டித்தும், பரீட்சைகளை நடத்துமாறு கோரியும் யாழ்ப்பாணப் பகுதி மாணவர்கள் இன்று மாபெரும் ஆர்ப்பாட்டப்பேரணி ஒன்றை நடத்தவுள்ளனர்.

இந்த ஆர்ப்பாட்ட பேரணி இன்று காலை 9 மணிக்கு யாழ் பல்கலைக்கழகத்திலிருந்து ஆரம்பமாகி யாழ். கல்விப் பணிப்பாளர் காரியாலயத்தில் நிறைவுபெறும்;

கல்விப்பணிப்பாளரிடமும், செஞ்சிலுவை சங்கப்பிரதிநிதியிடமும் மாணவர் ஒன்றியத்தினால் மகஜர்கள் கையளிக்கப்படும்;

இதனைத்தொடர்ந்து யாழ். பல்கலைக்கழகத்தில் மாபெரும் பொதுக்கூட்டமும் இடம்பெறவுள்ளது;

## பேரணிக்கு தமிழர் ஆசிரியர் சங்கம் ஆதரவு

(யாழ்ப்பாணம்)
அதிபர்கள் கொலையைக் கண்டித்தும் பரீட்சைநடாத்துமாறு கோரியும் இன்று நடைபெறவிருக்கும் ஆர்ப்பாட்டப் பேரணிக்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தமது முழு ஆதரவையும் தெரிவிப்பதோடு, மாண

(4-ம் பக்கம் பார்க்க)

## ● கிளிநொச்சியில்

# பயங்கர பொம்மர் தாக்குதல்

# 5 பெண்கள் உட்பட 15 பேர் பலி!

[யாழ்ப்பாணம்]

**கிளிநொச்சி 3-ம் வாய்க்கால் பகுதியிலுள்ள அரசினர் நெற்பண்ணைமீது நேற்றுக்காலை நடந்த பயங்கர பொம்மர் தாக்குதலில் 5 பெண்கள், சிறுவர்கள், வயோதிபர்கள் உட்பட பதினைந்துபேர் பலியானார்கள். பத்துப்பேர் படுகாயமடைந்தனர்.**

நேற்றுக்காலை 7-55 மணியளவில் மூன்று பொம்மர்கள் வட்டமிட்டு இந்த பயங்கர தாக்குதலை நடத்தின.

3-ம் வாய்க்கால் பகுதியிலுள்ள அரசபண்ணையில் தங்கியிருந்தவர்கள்மீது இத்தாக்குதல் இடம்பெற்றது.

இச்சம்பவம் கிளிநொச்சி அரச நெற்பண்ணையில் இடம்பெற்றதில் 7 குடும்பங்களைச் சேர்ந்த 15 பேர் பலியானார்கள். 10 பேர் படுகாயமுற்றனர்;

3 பொம்மர் விமானங்கள் பண்ணையில் 7 குடும்பத்தினர் தங்கியிருந்த ஒரு மண்டபம் மீது தாக்குதல் நடத்தின. இங்கிருந்த 15பேரும் உயிரிழந்தனர்.

இதன்பின் 3ம் வாய்க்காலில் வீசப்பட்ட ஒரு குண்டு பின் வளவில் வீழ்ந்து வெடித்ததில் அவ்வீடு சேதமானது. இங்கு பலியானவர்களில் என். ஆறுமுகம் (55 வயது), ஆ கமலாதேவி (13 வயது), ஆ. விஜயலக்சுமி (10 வயது), திருமதி செல்வம் (55 வயது), இவரின் இரு பேத்திகள் (12, 18 வயது) உமாதேவி (7 வயது), மோகன் (28 வயது), வீ. சித்திரம்மா (25 வயது) ஆகியோர் அடையாளம் காணப்பட்டனர்; மற்றும் ஐவர் அடையாளம் காணப்படவில்லை; 15 சடலங்களும் ஒன்றாகச் சேர்த்து நேற்றுப் பிற்பகல் 3 மணிக்கு தகனம் செய்யப்பட்டது

சி. சிவராசா (வயது 18), சி. சிவக்குமார் (வயது 20), ஆ. சாந்தரூபி (வயது 07), சிவாசினி (வயது 05), செல்வராசா (20 வயது), சிவரஞ்சினி (வயது 03), உட்பட பத்துப்பேர் காயமடைந்தனர் 3 வீடுகள் தரைமட்டமாகின. காயப்பட்டவர்களில் சி. சிவராசா, சி. சிவக்குமார் ஆ. சாந்தரூபி ஆகியோர் யாழ்: போதனா வைத்திய சாலையில் நேற்றிரவு அனு

(4-ம் பக்கம் பார்க்க)

## தேசியக்கட்சி முன்னணியில்

[டாக்கா]
பங்களாதேஷ் முன்னாள் ஜனாதிபதி ஜெனரல் எர்ஷாத் தாம் போட்டியிட்ட 5 தொகுதிகளிலும் அமோக வெற்றி

(4-ம் பக்கம் பார்க்க)

## ஏப்ரல் 6 முதல் 15 வரை முத்தமிழ் விழா

(யாழ்ப்பாணம்)
தமிழீழ விடுதலைப் புலிகளின் கலை, கலாசாரப் பிரிவினர் நடாத்தும் முத்தமிழ் விழா எதிர்வரும் ஏப்ரல்மாதம் 6ம் திகதி தொடக்கம் 15ம் வரை யாழ்ப்பாணத்தில்

(4-ம் பக்கம் பார்க்க)

## இன்று சகல பகுதியிலும் மாணவர் பேரணி

(யாழ்ப்பாணம்)
மன்னார் மாவட்டத்தின் வங்காலையில் கடந்த 17-ஆம் திகதி சிறீலங்கா இராணுவத்தால் மூன்று பாடசாலை அதிபர்கள் கைது செய்யப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்தும், தமிழ் மாணவர்களின் கல்வி மீதான சிறீலங்கா அரசின் காட்டுமிராண்டித்தனமான அடக்குமுறைகளைக் கண்டித்தும் மாணவர்களின் பேரணி இன்று வடமாகாணத்தின் சகல மாவட்டங்களிலும் நடைபெறவுள்ளதாக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது;

இன்று யாழ். மாவட்டத்தில் வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவுப்பகுதி ஆகிய பிரதேச மாணவர்களின் பேரணிகள் அவ்வப் பிரதேசங்களிலேயே காலை 9-00 மணிக்கு ஆரம்பமாகு

(4-ம் பக்கம் பார்க்க)

## இந்தியாவிலுள்ள அமைப்புகளுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் எவ்வித தொடர்புமில்லை

[சென்னை]
விடுதலைப் புலிகளுக்கும் இந்தியாவில் எந்தவொரு மாநிலங்களிலுமுள்ள விடுதலை அமைப்புகளுக்குமோ அல்லது தீவிரவாத குழுக்களுக்குமோ எதுவித தொடர்புமில்லை என 'இந்திய மத்திய அரசுக்கு நன்கு தெரியும்.

இவ்வாறு தமிழகத்திலிருந்து வெளிவரும் 'துக்ளக்' சஞ்சிகை கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டுள்ளது. அக்கட்டுரையில் மேலும் குறிப்பிடுகையில்:

(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

அலைடவு கடைக்குரிய இரும்புக் கூடும், இரும்புப் பெட்டியும் விற்பனைக்குண்டு: காலை 9-00 மணி முதல் 12-00 மணி வரை தொடர்பு கொள்ளவும். 149/2. கஸ்தூரியார் வீதி, (ஞெலெக்ஸ் பேக்கவுஸ் முன்பாக) யாழ்ப்பாணம்.

(சி-4403)

### கலண்டர்கள், டயறிகள்

இவ்வாண்டுக்கான கலண்டர்கள், டயறிகள், பாடசாலை உபகரணங்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்: பூபாலசிங்கம் புத்தகசாலை, மின்சார நிலைய வீதி, (பிறவுண் கம்பெனி அருகில்) யாழ்ப்பாணம்.

(எ-1116)

### வகுப்புகள்

G. S. Q (Bio) வகுப்புக்கள் எதிர்வரும் சனிக்கிழமை (02-03-91) ஆரம்பமாகவுள்ளன. சேரவிரும்புவோர் தவறாது சமூகம் தரவும் அத்துடன் Shorthand & Type writting, Home Science Diploma வகுப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன. தொடர்பு கொள்ளவும்: அதிபர் உயர் கல்விக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

(சி 4396)

### மீரா 25-வது நாவல்

மீரா வெளியீட்டாளர்களின் இருபத்தி ஐந்தாவது பிரசுரமாக பிரசுரிப்பதற்கு சமகால நிகழ்வுகளை மையமாக கொண்ட நல்லதொரு நாவலை எழுத்தாளர்களிடம் இருந்து வரவேற்கிறோம்.

(சி 4390)


## சமூகப் தரவும்

(யாழ்ப்பாணம்)

வட பிராந்திய லங்கா சோல்ட் லிமிட்டெட்டின் ஆனையிறவு, குறிஞ்சாத்தீவு, செம்மணி, கல்லுண்டாய் உப்பளங்களைச் சேர்ந்த சகல தர ஊழியர்களையும், அதிகாரிகளையும் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு பளையிலுள்ள பிராந்திய காரியாலயத்தில் கடந்த ஜூலை-மார்கழி வரையிலான சம்பள கொடுப்பனவு சம்பந்தமாக கடைப்பிடிக்கவேண்டிய புதிய அணுகுமுறை பற்றிய விளக்கக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு பிராந்திய முகாமையாளர் கேட்டுள்ளார்.

# "தமிழரை அழிப்பதில் சிங்களவர் ஒற்றுமை"

(நாவற்குழி)

சிங்களவர்களைப் பொறுத்தவரையில் கொள்கையில் வேறுபாடு உடையவர்களாக இருந்தாலும் தமிழர்களை அழிப்பதில் ஒற்றுமையாக செயல்படுகிறார்கள். ஆனால் தமிழர்களைப் பொறுத்தவரை இன்னும் பலர் பார்வையாளர்களாகவே இருக்கிறார்கள்.

யாழ். மாவட்ட பிரச்சாரப் பிரிவு முக்கியஸ்தர் திரு. தினேஷ் கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாசாலையில் நடைபெற்ற கருத்தரங்கில் பேசுகையில் இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் நாம் மேலும் மேலும் போராட்டத்தில் இணையாமல் அந்நியப்பட்டால் இராணுவம் எமது பிரதேசத்தைக் கைப்பற்றும் நிலை ஏற்படும். ஆகையால் நாம் அனைவரும் போராட்டத்தில் இணைய வேண்டும் போராட்ட காலத்தில் சிறந்த முறையில் கல்வி கற்பது கடினம்.

கல்விகற்பதாக சாட்டுக் கூறி மாணவர்கள் பலர் போராட்டத்திலிருந்து அந்நியப்படுகிறார்கள். இந்நிலை மாறி மாணவர்கள் அனைவரும் நாட்டுக்கு உதவக் கூடிய வகையில் கல்விகற்று போராட்டத்திலும் இணைய வேண்டும்.

(107)

## அஞ்சலி கூட்டங்கள்

[பருத்தித்துறை]

கல்விப்பணிக்காகத் தன்னை முழுமையாக அர்ப்பணித்து பெண்களின் கல்விஅபிவிருத்தி மேம்பாட்டில் சாதனைகள் பல புரிந்த அமரர் செல்வி ஆர். ஜே. மானின் அஞ்சலிக் கூட்டங்கள் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அதிபர்கள் தலைமையில் கல்லூரிகளில் நடைபெற்றன.

# மாணவர் போராட்டத்தில் ஆசிரியர் பங்கு என்ன?

(யாழ்ப்பாணம்)

தமிழீழ பிரதேசத்தில் சிங்கள அராஜக அரசானது கட்டவிழ்த்துவிட்டுள்ள கண்மூடித்தனமானதும், இழிவானதுமான இராணுவ நடவடிக்கைகளின் திட்டமிடப்பட்ட தமிழர் இன அழிப்பு கல்வி, கலாச்சார, உடைமை அழிப்புகளும் தொடர்வதனை தமிழீழத்தின் தென்பகுதி முதல் இன்றைய மன்னார், வன்னி வரை சம்பவங்கள் வரை நியாயப்படுத்தமுடியாத நிகழ்வுகளாக இவற்றினை எமக்கு உணர்த்தி நிற்கின்றது.

இவ்வாறு கோப்பாய்/பலாலி ஆசிரியர் ஒன்றியம் விடுத்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

இந்நிலையில் ஆசிரியர்கள் வரலாறுகளை நிலைப்படுத்துபவர்களாகவும், நிதர்சனமாக எடுத்தியம்புவர்களாகவும், நியாயப்படுத்தி மாற்றுபவர்களாகவும் சமூகப்பொருத்தப்பாடு உள்ளவர்களாகவும் அவ்வ வேண்டிநிற்கும் தேவைகளுக்கேற்ப செயற்படுபவர்களாகவும் அமைகின்றனர் என சமூகமானது ஆசிரியத்துவம் என்ற உயர்நிலை பற்றிய எண்ணக் கருவினைக் கொண்டிருக்கின்ற வேளையில் இன்றைய தமிழினமானது சொல்லமுடியாத துன்பங்களையும் துயரங்களையும் இழப்புகளையும் சுமந்து நிற்கின்ற நிலையில், அதுவும் கல்வியும் அதனுடன் இணைந்த உயிரிழப்புக்களும், உடைமை இழப்புக்களும் தொடர்கின்றவேளையில் இதற்கெதிரான போராட்டத்தை ஏற்படுத்தி வழி நடாத்த வேண்டிய பாரிய பணி ஆசிரியர்களைச் சார்ந்தது.

ஆயினும் மாணவர்களே இவற்றினைக்கண்டு சீறிஎழுந்து போராட முன்வருகின்ற வேளையில் இவ்வாசிரியர்களில் அநேகர் ஒதுங்குவதால் நாளைய வரலாறு இவர்களை எள்ளி நகையாடி களங்கமான தொரு நிலையில் இவ்வாசிரியத்துவத்தை வரைவுபடுத்தி சான்று பகர்கின்ற நிலையினை ஆசிரியத்துவம் என்ற உயர்வான நிலைக்கு அமையப்

(8-ம் பக்கம் பார்க்க)

## அந்தியெட்டி அழைப்பும் நன்றி நவிலலும்!

### அமரர் வீரகத்தி தம்பிஐயா

(சேண்டாவில் தில்லையம்பதி)

தோற்றம்: 1928-10-20

மறைவு: 1991-01-31



திரு. தம்பிஐயா அவர்கள் 31-01-91-ல் அமரத்துவம் எய்திவிட்டார் என்பதையும் அன்னாரின் மரண அறிவித்தலை அசாதாரண சூழ்நிலை காரணமாக சகலருக்கும் அறியத் தராமல் போய்விட்டது என்பதை மிக மனவருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

01-02-91-ல் நடைபெற்ற அன்னாரின் இறுதிக்கிரியையில் கலந்து கொண்ட உள்ளூர் உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன் 02-03-91 சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருக்கும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து அன்னாரின் ஆத்மா சாந்திக்கு பிரார்த்திக்கும் வண்ணம் உள்ளூர் உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

"ஈஸ்வரி அகம்",
தில்லையம்பதி,
கோண்டாவில்.

(சி 4405)

## பயிலுநர் ஆசிரியர் குழு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த சகல பயிலுநர் ஆசிரியர்களையும் அளவெட்டி அருணோதயாக் கல்லூரிக்கு நாளை 2-ஆம் திகதி காலை சமுகம் தருமாறு குழுச் செயலாளர் கேட்டுள்ளார்.

## கிணற்றிற்கு பலி

[பண்டத்தரிப்பு]

தேவாலய உற்சவத்திற்குச் சென்ற பெண் ஒருவர் கிணற்றில் நீர் அள்ளும்போது தவறி விழுந்து பலியான சம்பவம் மாதகலில் இடம்பெற்றுள்ளது.

மாதகல் புனித செபஸ்தியார் தேவாலய வருடாந்த உற்சவத்திற்கு சென்ற மாதகலைச்சேர்ந்த நல்லம்மா (வயது 65) என்ற வயோதிப மாதுவே இவ்வாறு கிணற்றிற்கு பலியானவராவர்.

(72)

## இராசிபலன்

01-0-31991

வெள்ளிக்கிழமை

மேஷம்: வேலையால் தொல்லை. தாயார் கவலை, அலைச்சல் மிகுதி.

இடபம்: வேலைப்பளு, தொழில்கஷ்டம், குடும்ப அமைதி குன்றல்.

மிதுனம்: எதிர்பாராத உதவி, தொழில் லாபம். இனசனவருகை புகழ்.

கடகம்: வயிற்றில் ரோகம், மனைவியால்கவலை, பொருள் வரவு.

சிங்கம்: வாக்குவன்மை, தானதர்மம், குடும்பசுகம், காரியசித்தி.

கன்னி: குளப்பமடைதல், வைத்தியசெலவு, வீண்பகை, கற்பனை.

துலாம்: வாக்குவாதம், தொழில் சிறப்பு, பணியாள் சகாயம் மனக்குறை.

விருச்சிகம்: அதிகயோசனை, குடும்ப விரோதம், காரிய நஷ்டம்.

தனுசு: அந்நியர் நேசம், தொழில் பாதிப்பு, குடும்ப பகை, செலவுமிகுதி.

மகரம்: பெரியோர்பகை, தொழில் குறைவு, மாமனார் தொல்லை.

கும்பம்: தெய்வீகசெலவு, பணவரவு, குடும்ப மகிழ்ச்சி, சகோதர உதவி.

மீனம்: வித்தை விருத்தி, கல்வியால் புகழ், குடும்ப உல்லாசம்.

ஜோதிடர்

# 3000 நிறுவனங்கள் மீது விரைவில் விசாரணை

(கொழும்பு)

இலங்கையில் 3000க்கும் மேற்பட்ட அரசு சார்பற்ற வெளிநாட்டு, உள்நாட்டு நிறுவனங்கள் மீது ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைகள் மேற்கொள்ளவுள்ளது.

இந்த நிறுவனங்கள் மார்ச் 15க்கு முன் நிதி நிலை, நடவடிக்கை, தொடர்புகள் குறித்த சகல விபரங்களையும் இந்தக் குழுவிற்கு வழங்கவேண்டும்.

சில நிறுவனங்கள் சட்ட விரோத ஏமாற்று வேலைகளில் ஈடுபடுவதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. (ஸி)

# நினைவுக்கூட்டம்

[யாழ்ப்பாணம்]

புனித அந்தோனியார் சபையின் ஸ்தாபகரும், யாழ்ப்பாணம் 'கிறீன்பீல்ட்' விளையாட்டுக் கழகத்தின் முன்னோடியுமான காலஞ்சென்ற பிரான்ஸ் நாட்டைச்சேர்ந்த அருட் சகோதரர் இயூஜின் குருசோ அவர்களின் 120வது பிறந்த தினத்தைமொட்டி, எதிர் வரும் சனிக்கிழமை மாலை 4 மணிக்கு 'கிறீன்பீல்ட்' விளையாட்டுக்கழக மண்டபத்தில் நினைவுக்கூட்டம் ஒன்று நடைபெறவிருக்கின்றது. (வி)

## மக்கள் கருத்து

### ஏனிந்த மோகம்

மருதனார்மடம் கோட்டக் கல்வி அலுவலகத்திற்கு கடந்த வாரம் எனது தற்காலிக இடமாற்றம் சம்பந்தமாக கல்வி அதிகாரியைச் சந்தித்தேன். அவர் எனது விடயத்தைக் கேட்கு முன் 'நீர் ஏன் சிலிப்பர் அணிந்திருக்கின்றீர். ஆசிரியர்கள் சப்பாத்துப் போடவேண்டும். உம்மைப் பார்த்தால் வேறு உத்தோகில் வேலைசெய்பவர்போல் தெரிகிறது. இனிமேலாவது சப்பாத்துப் போட்டுக்கொண்டு பாடசாலைக்குப் போம்' என்றார்.

பின்னர் எனது வருகைக்கான காரணத்தைக் கேட்டார். பண் கோட்டக் கல்வி நிலையத்திலிருந்து தற்காலிகமாய் இலகுவில் பிரயாணம் செய்யக் கூடிய பாடசாலைக்கு இடமாற்றம் தரும்படியும் அதற்கான காரணத்தையும் கூறினேன். 'உமது விருப்பத்துக்குப் பாடசாலை தரமுடியாது. இடமாற்ற உத்தரவு வரட்டும். நாங்கள் பாடசாலை தருகிறோம்' என்றார். மீண்டும் அடுத்தமுறை வரும்போது செருப்பு அணியாது சப்பாத்து அணியவேண்டும் என்று கூறினார்.

இன்றைய காலகட்டத்தில் பாட்டா செருப்புத்தானும் வாங்க முடியாத நிலையில் செருப்பு அணிவது அநாகரீகமா? ஓர் ஏழை ஆசிரியன் மாதா மாதம் ஒழுங்காகச் சம்பளம் பெறமுடியாத நிலையில் சப்பாத்து வாங்க முடியுமா? யாழ்ப்பாண காலநிலைக்கு சப்பாத்து உகந்ததா? இவ்வதிகாரிக்குச் சப்பாத்துமேல் ஏன் இவ்வளவு மோகம். இவரின் செயலையும் பேச்சையும் பார்க்கும்போது அவரிடமோ அல்லது அவரின் நெருங்கிய உறவினரிடமோ விலைப்படாத சப்பாத்துக்கள் இருப்பதுபோல் தென்படுகிறது.

— பாதிக்கப்பட்ட ஆசிரியர்

# அம்பலமான ஊழல் 50 ஆயிரம் ரூபா அபராதம்

(யாழ்ப்பாணம்)

அரியாலையைச்சேர்ந்த 91/1 சுப்பிரமணியம் வீதி திரு. மு. ஐயாத்துரை கடந்த 28 ஆண்டுகளாகக் கிராம சேவை அலுவலராகக் கடமையாற்றிவருபவர். ஏறக்குறைய 14 வருடங்களுக்கு மேலாக பொதுமக்களுக்கு ஒரு கிராம சேவையாளர் தன் பணியாகக் கொண்டு வழங்கவேண்டிய நற்சான்றுப் பத்திரங்களை ரூபா 100/-, 150/- பணம் பெற்றுக் கொடுத்து வந்தமை விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் ஊழல் தடுப்புப் பிரிவால் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டுள்ளது.

இவ் ஊழல் விசாரணையின் போது தான் கடந்த காலங்களில் வெளிநாடு செல்ல எத்தனிப்போர், வேலை வாய்ப்புகளுக்காக முயன்றோருக்கு பணம்பெற்றே இச்சான்றிதழ் வழங்கியதையும், இது பெருந்தவறென்பதையும் ஏற்றுக் கொண்டார். தன் மகன் ஒல்லாந்துக்கு 6 வருடங்களுக்கு முன்னரே சென்று வெளிநாட்டு வருவாய் ஈட்டுவதாயும், மகள் சுவிற்சலாந்திலுள்ள ஒருவரை மணம் முடிக்க சுவிற்சலாந்து பயணமாவதற்காக கொழும்பில் சென்று தங்கியுள்ளதாகவும் மேலும் தெரிவித்தார்.

இத்தகைய வசதி படைத்த ஒருவர் தன் அலுவலகக் கடமைக்காகக் கையூட்டுப்பெற்ற குற்றத்துக்காக வடக்கு கிழக்கு அகதிகள் புனர்வாழ்வுக்கழகத்துக்கு ரூபா 50,000/- செலுத்தியுள்ளார். இப்பணம் பாதிக்கப்பட்ட மக்களின் சேவைக்காக ஒப்படைக்கப் படவுள்ளது.

இதேவேளை 361, கே. கே. எஸ். வீதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த க. பொன்னம்பலம் என்னும் வியாபாரி லக்ஸ்ரோஜன் பால்மாவை 1 பை நிர்ணய விலையிலும் ரூபா 13/- கூடுதலாக விற்கும் போது விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி ஊழல் தடுப்பு பிரிவினரிடம் கையும் மெய்யுமாக பிடிபட்டு தான் செய்த குற்றத்தை ஏற்றுக் கொண்டு வட-கிழக்கு அகதிகள் புனர்வாழ்வு கழகத்திற்கு ரூபா 3000/- குற்றபணமாக வழங்கியுள்ளார் என மேற்படி பிரிவினர் அறிவித்துள்ளனர். (வி)

# எண்ணெயில் தண்ணீர் வியாபாரிக்கு அபராதம்

(நாவற்குழி)

தேங்காய் எண்ணெயில் தண்ணீர் கலந்து விற்ற வர்த்தகர் ஒருவரை கண்காணிப்புக்குழு கையும் மெய்யுமாக பிடித்து விடுதலைப்புலிகளிடம் ஒப்படைத்தபோது அவருக்கு 5000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சரசாலை வடக்கைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் ஒரு போத்தல் தேங்காயெண்ணெயில் கால் போத்தல் தண்ணீர் கலந்து விற்றபோது கண்டு பிடிக்கப்பட்டது (107)

### மாணவர் போராட்டத்தில்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்ற ஒவ்வொருவரும் நகர்த்தெறிந்து எமது இன அழிவைத் தடுக்க அரண் அமைப்பதுடன் கண் போன்ற கல்வி பல நிலைகளில் அழிவடைவதையும் தடுத்து நிறுத்த இப்போராட்டங்களுக்கு கைகொடுத்து முனைப்புடன் போராட முன்வருவார்களா? (வி)

# வளைகுடாவில் யுத்தநிறுத்தம்

(ரியாத்)

வளைகுடா போர் 43 நாட்களின் பின் தற்காலிக யுத்த நிறுத்தமொன்று ஏற்பட்டுள்ளது. ஈராக்கின் நடவடிக்கையைப் பொறுத்தே நிரந்தர யுத்த நிறுத்தம் ஏற்படுமென அமெரிக்கா அறிவித்துள்ளது.

ஐ. நா. சபையின் 12 நிபந்தனைகளையும் நிபந்தனையற்ற முறையில் ஏற்றுஈராக் குவைத்திலிருந்து முற்றாக வெளியேறியுள்ளது. இதையடுத்து அமெரிக்க, பன்னாட்டுப்படைகள் நேற்றுக் காலை 10-30மணிக்கு (இலங்கை நேரப்படி) தமது சகல தாக்குதலையும் தற்காலிகமாக நிறுத்தியது.

இப்பகுதியில் நிரந்தர யுத்த நிறுத்தமொன்றை ஏற்படுத்த அமெரிக்கா முன்வைத்துள்ள பலநிபந்தனைகளை ஈராக் ஏற்றுக் கொள்ளவேண்டியுள்ளது. (கி)

---

## ஏப்ரல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து வெகு விமரிசையாக 10 நாட்கள் கொண்டாடப்படவிருக்கிறது.

(விபரம் நாளை)

---

## பேரணிக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வர்களின் கல்வியைப் பாதிக்காதவகையில் ஒழுங்குகளை மேற்கொண்டு இப்பேரணியில் கலந்து கொள்ளுமாறு இ. த. ஆ. சங்கம் சகல ஆசிரியர்களையும் கோருகின்றது.

மேற்படி தீர்மானம் நேற்று சங்கப்பணிமனையில் நடந்த இ. த. ஆ. சங்கச் செயற்குழுக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதாக சங்கப் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் தெரிவித்தார்.

---

## இன்று

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மென மாணவர் ஒன்றியம் அறிவிக்கின்றது.

வலிகாமம் பகுதியில்பேரணி யாழ் பல்கலைக்கழகத்தில் இருந்து ஆரம்பமாகும் எனவும் இதில் ஆசிரியர் கலாசாலை மாணவர்களும், பல்கலைக்கழக மாணவர்களும் இப்பேரணியில் கலந்துகொள்வார்களெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்து மாணவர்களும் இப்பேரணிகளில் கலந்து கொள்ளுமாறு மாணவர் ஒன்றியம் அழைப்பு விடுக்கிறது. (வி)

---

## கிளிநொச்சியில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த ஏழு குடும்பங்களும் நெல் அவிக்கும் தொழிற்சாலையில் தொழில் புரிந்து வந்தனர். இவர்கள் மீதே குண்டுவீச்சு நடந்துள்ளது.

(56- 83- 23)

---

## இந்தியாவிலுள்ள

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழக அரசை கலைக்கவும் அடுத்த தேர்தலில் தி. மு. கவுக்கு எதிராக பிரசாரம் செய்யவுமே மத்திய அரசு இவ்வாறு புலிகள் மீது ஓர் குற்றச்சாட்டை சுமத்திவருகிறது. இது பிரதமர் திரு. சந்திரசேகருக்கும், காங்கிரஸ் தலைவர் திரு. ராஜீவ் காந்திக்கும் மிக நன்கு தெரியும்.

---

## தேசியக்கட்சி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றுள்ளார்.

298 இடங்களுக்கு நடைபெற்ற இத்தேர்தலில் 291 முடிவுகள் வெளிவந்துள்ளன. இதில் பங்களாதேஷ் தேசிய கட்சி-136, அவாமிலீக்-85, ஜாதியா கட்சி-36, ஜமாத் இஸ்லாமியா-17, சுயேட்சைகளும் ஏனைய கட்சிகளும்-17 இடங்களை பெற்றுள்ளன.

கடந்த பல வருடங்களுக்கு பின் இந்தத் தேர்தலில் நாட்டின் 90 சதவீதமானோர் வாக்களித்ததும், நியாயமான முறையில் தேர்தல் நடைபெற்றதும் குறிப்பிடத்தக்கது. (சு)

---


# 31-வது நினைவுநாள்

## செல்வி

## இராஜேஸ்வரி பொன்னம்பலம்

(மக்கள் வங்கி உத்தியோகத்தர்)

28-01-1991 அன்று அகாலமரணமானார்

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

முகாமையாளரும்,
உத்தியோகஸ்தர்களும்

மக்கள் வங்கி பிரதானவீதிக் கிளை,
யாழ்ப்பாணம். (சி-4406)



# 31-ம் நாள் நினைவஞ்சலி

## சபாபதிப்பிள்ளை முத்துச்சாமி

(செல்லப்பா)

அனலைதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் நெடுந்தீவு உடையார் மகன் செல்லப்பா என்றழைக்கப்படும் சபாபதிப்பிள்ளை முத்துச்சாமி என்பவரின் அந்தியேட்டிக் கிரியை 2-3-91 சனிக்கிழமை அனலைதீவு-புளியந்தீவில் நடைபெற்று, வீட்டுக்கிரியை அவரது இல்லத்தில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் யாபேருக்கும் தெரிவித்துக் கொள்கிறோம்.

மனைவி, மக்கள்,
பேரப்பிள்ளைகள்

(சி-4407)



இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி கோவில் மேற்கு வீதி, 66ம், இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991ம் ஆண்டு மார்ச் மாதம் 1ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.

Registred as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100909/81.